***கவனிக்க.*** - (i) *இவ்வர்த்தமானியின் பகுதி* VI *இல் 2020 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்ட நீதாசன வலயங்களின் யூரிமார்களின் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*
(ii) *2020.02.28 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* VI *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2166 - 2020 මාර්තු මස 06 වැනි සිකුරාදා - 2020.03.06**

*2166 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 882 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 889 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2020, மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, மாச்சு மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


881 - B82015 - 5403 (2020/03)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மாத்தளை பிரதேச சபை

*சனசமூக சபைகள் அமைத்தல், பதிவு செய்தல், அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் போன்றவற்றிற்கான துணை விதி சட்டவிதிகள் 1952 ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் துணை விதி சட்ட விதிகள் - 2020*

*261 ஆம் அத்தியாயமான 1952 ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் (துணைவிதிச் சட்டம்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் மாத்தளை பிரதேச சபையில் 2019.03.07 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இலக்கம் 6.4 இன் கீழ் எடுக்கப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*யூ. எச். எம். கபில பண்டார ஹேன்தெனிய,*
*தலைவர்,*
*மாத்தளை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மாத்தளை,*
*2020, பெப்புருவரி 20.*

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் (துணைவிதிச் சட்டம்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடய பொறுப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அவரால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட, 2018.09.25 ஆந் திகதி கொண்ட 2090/4 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்டதான மற்றும் மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2018.09.25 ஆந் திகதிய, 2090/4 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள, சனசமூக சபைகள் அமைத்தல், பதிவு செய்தல், அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் போன்றவற்றிற்கான மாத்தளை பிரதேச சபையின் துணை சட்ட விதிகள் பின்வருமாறு. இத்தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற தினத்தலிருந்து அமுலாக்குவதற்கும் மாத்தளை பிரதேச சபை எல்லைக்குள் நடைமுறைபடுத்துவதற்கும் சபையின் தீர்மானத்தின் குறித்த சட்டத்தின் 03 ஆம் பிரிவின் (1) உப பிரிவிற்கு இணங்க இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*03 - 227*

---

## பேருவளை பிரதேச சபை

பாதைகளுக்கு பெயர் சூட்டுதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆவது பிரிவின் பிரகாரம் இந்தப் பிரதேச சபையின் மாலேவன்பத்த உப காரியாலய அதிகாரப் பிரிவுக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைக்கு "அதிபூஜ்ய ஹெட்டிமுல்லே நந்தசார திஸ்ஸ அனுநாஹிமி மாவத்தை" எனப் பெயர் சூட்டவதற்காக பிரதேச சபையின் 2018.10.16 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த கூட்டத்தின் இலக்கம் 5.11.1 கொண்ட பிரேரணைக்கு மேல் மாகாண கௌரவ ஆளுநரின் அங்கீகாரம்*

கிடைக்கப்பட்டுள்ளது என்பதால் அந்தப் பாதை 2020.01.14 ஆந் திகதி தொடக்கம் "அதியூஜ்ய ஹெட்டிமுல்லே நந்தசார திஸ்ஸ அனுநாஹிமி மாவத்தை" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

பி. டபிள்யூ. எம். மேனக விமலரத்ன,
தவிசாளர்,
பேருவளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பேருவளை,
2020, பெப்புருவரி 17.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | - | பேருவளை பிரதேச சபை |
| 2. | மாவட்டம் | - | களுத்துறை |
| 3. | பிரதேச செயலாளர் பிரிவு | - | பேருவளை |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | - | ஹெட்டிமுல்ல சந்தியிலிருந்து தர்கா நகர வரையிலான பிரதான பாதை |
| 5. | பாதையின் ஆரம்பம் | - | ஹெட்டிமுல்ல சந்தி |
| 6. | பாதையின் முடிவு | - | தர்கா நகர் அதிகாரப்பிரிவின் ஆரம்பம் |
| 7. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | - | "அதிபூஜ்ய ஹெட்டிமுல்லே நந்தசார திஸ்ஸ அனுநாஹிமி மாவத்தை" |

03 - 228/1

---

## பேருவளை பிரதேச சபை

பாதைகளுக்கு பெயர் சூட்டுதல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆவது பிரிவின் பிரகாரம் இந்தப் பிரதேச சபையின் மாலேவன்பத்த உப காரியாலய அதிகாரப் பிரிவுக்குச் சொந்தமான கீழே உப அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைக்கு "டேவிட் ஜயசிங்க மாவத்தை" எனப் பெயர் சூட்டவதற்காக பிரதேச சபையின் 2018.10.16 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த கூட்டத்தின் இலக்கம் 5.11.2 கொண்ட பிரேரணைக்கு மேல் மாகாண கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளது என்பதால் அந்தப் பாதை 2020.01.14 ஆந் திகதி தொடக்கம் "டேவிட் ஜயசிங்க மாவத்தை" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

பி. டபிள்யூ. எம். மேனக விமலரத்ன,
தவிசாளர்,
பேருவளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பேருவளை,
2020, பெப்புருவரி 17.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | - | பேருவளை பிரதேச சபை |
| 2. | மாவட்டம் | - | களுத்துறை |
| 3. | பிரதேச செயலாளர் பிரிவு | - | பேருவளை |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | - | ஹெட்டிமுல்ல மல்லபொக்க வீதியில் முதலில் இடது பக்கமாகவுள்ள மிருக வைத்தியர் அலுவலகத்திற்கு செல்லும் பாதை |
| 5. | பாதையின் ஆரம்பம் | - | மல்லபொக்க வீதி |
| 6. | பாதையின் முடிவு | - | சுனாமி வீடுகள் 21 |
| 7. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | - | "டேவிட் ஜயசிங்க மாவத்தை" |

03 - 228/2

## இபலோகம பிரதேச சபை

ஹிரிபிடியாகம சந்தி தொடக்கம் காகம வரையிலான பாதைக்கு
அமரர் A.M.S. அதிகாரி அவர்களின் பெயர் சூட்டுதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் இபலோகம பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஹிரிபடியாகம தொடக்கம் காகம வரையிலான பாதைக்கு மறைந்த முன்னால் அமைச்சர் அமரர் A.M.S. அதிகாரி அவர்களின் பெயரைச் சூட்ட 2019.12.26 ஆந் திகதி பொதுக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 255 இற்கு அமைவாக இபலோகம பிரதேச சபை தீர்மானம் மேற்கொண்டுள்ளது.*

*இது சம்பந்தமாக ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் 2020.03.31 ஆந் திகதிக்கு முன்பதாக முன்வைக்குமாறு பணிவுடன் அறியத் தருகிறேன்.*

*நிஹால் திலகவர்தன,*
*தலைவர்,*
*இபலோகம பிரதேச சபை.*

*03– 19*

---

## மாவனல்லை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) மற்றும் 24 (2) ஆம் உறுப்புரையின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*2019.08.16 திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1496 ஆம் இலக்க வர்த்தமானியில் மாகாணசபை அறிவித்தலின் கீழ் மாவனல்லை பிரதேச சபையினால் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) மற்றும் 24(2) ஆம் உறுப்புரையின் கீழ் பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகளாக பிரகடனப்படுத்தப்பட்ட அறிவித்தலின் அட்டவணையில் காட்டப்பட்ட இலக்கம் 03 பதிவிடப்பட்ட பாதைகளுக்காக எதிர்ப்புக்கள் இல்லாமையினால் அப்பாதைகள் பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகளாக பரிபாலனம் செய்யப்படும் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.*

*சந்தன குமார ஜயவந்தல,*
*தவிசாளர்,*
*மாவனல்லை பிரதேச சபை*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மாவனல்லை,*
*2020, சனவரி 29.*

**அட்டவணை - 03**

*பாதையின் பெயர் - ஹம்புன்கடுவ கிராமத்தின் டிங்கிரியா ஹேனா காணி ஊடாக மற்றும், உக்கு நயிதேகே ஹேனா எனும் கட்டுவங்கொட ஹேன தற்போது வத்த மற்றும் படல்கே ஹேன காணி ஊடாக இருக்கும் பாதை.*

*பாதையின் நீளம் - 62.5 மீற்றர்*

*அகலம் - டிங்கிரிய ஹேன எனும் காணியின் ஊடாக 10 அடியும் உக்கு நயிதேகே ஹேன எனும் கட்டுவங்கொட ஹேன தற்போது வத்த மற்றும் படல்கேஹேன எனும் ஒன்றிணைந்த காணியின் ஊடாக 08 அடி.*

*பாதையின் ஆரம்பமும் முடிவும் - படலகேஹேன காணி வரை*

*கிராம அதிகாரிப் பிரிவு - ஹம்புன்கடுவ.*

| **இடது பக்க காணி உரிமையாளர் பெயர்** | **காணியின் பெயர்** |
|---|---|
| திரு. கே. எல். கஸ்தூ ரி நிசாந்த | டிங்கிரயாஹேன |
| திரு. கே. எல். அபேரத்ன | டிங்கிரியாஹேன |
| திரு. கே. எல்.அபேரத்ன | டிங்கிரியாஹேன |
| திரு.கே. எல். அபேரத்ன | உக்குநயிதேகே ஹேன |

| **வலது பக்க உரிமையாளர்** | **காணியின் பெயர்** |
|---|---|
| திரு. ஆர்.பீ. கருணாசத்ன | டிங்கிரயாஹேன |
| திரு. டப்லியூ. ஜீ. முணசிங்ஹ | டிங்கிரியாஹேன |
| திரு.கே.எல்.கஸ்தூ ரி நிசாந்த | டிங்கிரியாஹேன |
| திரு.கே.எல்.அபேரத்ன | உக்குநயிதேகே ஹேன |
| திரு. கே.எல்.வீ.எஸ்.வியனகே | உக்குநயிதேகே ஹேன |

*03- 61/1*

---

**மாவனல்லை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) மற்றும் 24 (2) ஆம் உறுப்புரையின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*2019.05.31 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் 1069 ஆம் இலக்க வர்த்தமானியில் மாகாணசபை அறிவித்தலின் கீழ் மாவனல்லை பிரதேச சபையினால் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24(1) மற்றும் 24(2) ஆம் உறுப்புரையின் கீழ் பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகளாக பிரகடனப்படுத்தப்பட்ட அறிவித்தலின் உப அட்டவணையில் காட்டப்பட்ட இலக்கம் 03 பதிவிடப்பட்ட பாதைகளுக்காக எதிர்ப்புக்கள் இல்லாமையினால் அப்பாதைகள் பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகளாக பரிபாலனம் செய்யப்படும் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.*

*சந்தன குமார ஜயவந்தல,*
*தவிசாளர்,*
*மாவனல்லை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மாவனல்லை,*
*2020, சனவரி 29.*

**அட்டவணை - 03**

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | - | கெதேகும்புர பாதை |
| பாதையின் ஆரம்பம் முதல் முடியும் வரை | - | நாதெனியில் இருந்து கணேதன்னை வரையான பாதை (முடிவு- கால்வாய்) |
| கிராம அதிகாரிப் பிரிவு | - | இலக்கம் 29 ஹிங்குல |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | - | நீளம் 106.40 மீற்றர் அகலம் : 08 அடி |

*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்*

| ***உரிமையாளரின் பெயர்*** | ***காணியின் பெயர்*** |
|---|---|
| *1. திருமதி. ராஜு சுபத்திரா* | *கெதே அஸ்ஸெத்தும கும்புர* |
| *2. திரு. மெஹம்மட் ஹாசிம் அப்துல் ஷகூர்* | *கேதே அஸ்ஸெத்தும கும்புர* |

*03- 61/2*

---

## பன்வில பிரதேச சபை

*சனசமூக மன்றங்களுக்கான துணை விதிகளை ஏற்றுக்கொள்ளல்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கமையப் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள முன்மொழிவு 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி இலக்கம் (இ) 01 கொண்ட பொதுச் சபைத் தீர்மானத்தின் கீழ் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஏ. ஜீ. செனவிரத்ன,*
*தவிசாளர்,*
*பன்வில பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*பன்வில,*
*2019, திசெம்பர் 24.*

### அட்டவணை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும், 2018.09.25 ஆந் திகதியையும் 2090/4 ஆம் இலக்கத்தையும் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கவென வழங்கப்பட்ட மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளது நிருவாகப் பிரதேசங்களில் சனசமூக மன்றங்களைத் தாபித்தல், பதிவு செய்தல், அவற்றின் கருமங்கள், கடமைக்கூறுகளைத் தீர்மானித்தல் மற்றும் கண்காணிப்பு செய்தல் பற்றிய ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளைப் பன்வில பிரதேச சபைக்குப் பொருந்தும் துணை விதிகளாகச் செயற்படுத்துதல் வேண்டுமென இந்தச் சபை தீர்மானிக்கின்றது.*

*03 - 203*

## திக்வெல்ல பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (1) (ஆ) உறுப்புரையின் கீழான அறிவித்தல்*

*தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்ல பிரதேச சபையில் 1989 ஆம் ஆண்டின் 15 ஆந் திகதி பிரதேச சபை சட்டத்தின் உறுப்புரை 24 (1) இன் படி 2019.12.24 அன்று நடைபெற்ற பொதுச் சபை கூட்டத்தில், திக்வெல்ல பிரதேச சபை தீர்மான இலக்க 5.7.1 இன் கீழ் திக்வெல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான ஒரு சாலையாக அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.*

*இந்த அறிவிப்பை வர்த்தமானியில் வெளியிட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் அதன் உரிமை கோரலை நிரூபிக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் உறுப்புரை 24 (2) அதன்படி செயல்படும்படி கேட்கப்படுகிறீர்கள்.*

*இந்த காலகட்டத்தில் இந்த அறிவிப்புக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் திக்வெல்ல பிரதேச சபைக்கு சொந்தமான சாலைகள் ஆகுமென்று பொது மக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கிறேன்.*

*கித்சர முதுகுமாரன,*
*தலைவர்,*
*திக்வெல்ல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்வெல்ல.*
*2019, திசம்பர் 02.*

**அட்டவணை**

| வரிசை இல. | சாலையின் பெயர் | சாலையின் ஆரம்பம் | சாலையின் முடிவு | சாலையின் வலது பக்க காணி | சாலையின் இடது பக்க காணி | சாலையின் நீளம் (மீ) | சாலை அகலம் (மீ) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சமகி மாவத்த | தண்டேனிய ராதம்பல பாதை | திரு. பி. ஐ. அபே வர்தனாவின் காணி | 1. திரு. HUK சுனிலின் காணி<br>2. இத்தகலஹேனா காணி<br>3. நிலத்தின் திலினா மதுஷன்<br>4. 4 நிலத்தின் G.U.P கருணாவதி | 1. திரு. HUK ஆனந்த அவர்களின் காணி<br>2. திரு. ரசிகா சம்பத் அவர்களின் காணி<br>3. ஆத்மக நிலம்<br>4. ஆர். நந்திக பிரசன்னா அவர் களின் காணி | 223 | ஆரம்பம் முதல் 30 மீ. வரையான தூரம் 2.5 மீ. அகலமும் மிகுதித் தூரம் 3.5 மீ. அகலமும் கொண்டது. |

*03-130*

---

## யட்டி நுவர பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) ஆவதுபிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் கண்டிமாவட்டத்தில் யட்டி நுவர பிரதேச சபைக்குள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகளென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2019, செப்தெம்பர் 20 ஆந் திகதி கொண்ட 2142 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது.*

இது பற்றி இப்பிரதேசத்தின் பொது மக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்டவேண்டுமெனின், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மூன்று மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆவது பிரிவின் படி செயற்படுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தக் காலஎல்லைக்குள் இந்த அறிவித்தல் தொடர்பில் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட வில்லை என்பதனால், குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டி நுவர பிரதேச சபைக்கு உரித்தான பாதைகளாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டுவரும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஆர். என். கே. ரூபஸ்ஸர.
தவிசாளர்,
யட்டி நுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
யட்டி நுவர, எம்பில்மீகம,
பிலிமதலாவ.

**அட்டவணை**

| தொடர் இல. | பாதையின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபுறம் | வலதுபுறம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | வெலேகடையிலிருந்து தெல்கஹ வத்த வரையிலான பாதை | கொட்டலிகொட தெற்கு | வெலேகடையிலிருந்து | தெல்கஹ வத்த வரை | 1. எச். கே. குமாரசிரி<br>2. ஜே. அபேரத்ன<br>3. ஜே. தயாரத்ன<br>4. ஜே. ஜீ. ஆர். ஜயசிங்ஹ<br>5. எம். ஆர். ஜயசிங்ஹ<br>6. ஆர். கருணாதாச<br>7. எச். ஜீ. நந்தாவதி<br>8. சீ. ஜினதாக | 1. அபேரத்ன<br>2. எம். ஆர். ஜயசிங்ஹ<br>3. சீ. எச். ஜயசிங்ஹ<br>4. டப்ளிவ் விஜேசிங்ஹ | 270 மீ. | 3.65 மீ. | 8678 |
| 02. | குருபனாவ ரத்தே பிட்டிய பாதை | தொலுவ கிழக்கு | குருபனாவ பாதை | ரத்தேபிட்டிய (திரு. பந்துல குலரத்னவின் காணி) | 1. பீ. பீ. குணவர்தன<br>2. துஷார சீலவங்ஸ<br>3. ஸ்ரீமதி பத்மலதா<br>4. அஜித் பியரத்ன<br>5. ரஞ்சித் ஜினதாச<br>6. பந்துல குலரத்ன | 1. என். பீ.பீ. எஸ். ரத்தேபிட்டிய<br>2. சோமரத்ன<br>3. லிலதா புஷ்பராணி.<br>4. சாம குமார<br>5. எஸ். பத்மலதா<br>6. எம். பீ. நவரத்ன | 82.40 மீ. | 2.45 மீ | 5149 |

| தொடர் இல. | பாதையின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபுறம் | வலதுபுறம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03. | கொன்ன தெனிய இடைப் பாதை | ஊரா பொல | கொன்ன தெனிய பாதை (திரு. சம்பா கருணாரத்ன வினது வீடு அருகில்) இருந்து | நிமல் கருணாரத்ன இனது வதிவிடக் காணி எல்லை வரை | 1. சீ. கருணாரத்ன<br>2. பீ. ஆர். சித்ராங்கனீ மெனிகே<br>3. அனுர கருணாரத்ன<br>4. ஆர். சீ. ஜே. கருணாரத்ன<br>5. நிமல் கருணாரத்ன | 1. டீ. எம். கருணாரத்ன<br>2. ஆர். பீ. ஐராங்கனீ கருணாரத்ன<br>3. மாலனி கருணாரத்ன<br>4. வசந்தகுமார திசாநாயக்க<br>5. நிமல் கருணாரத்ன | 130 மீ. | 3 மீ. | 9310 |
| 04. | கல்லிந்தே வத்த பாதை | முன்வத்து கொட | முன்வத்து கொட கூரட்டிய பாதை | எலகல்ல பாதை | 1. ஜீ. ஜீ. கருணாரத்ன<br>2. ஆர். டப்ளிவ். எம். ஆர். சீ. பண்டார<br>3. ஆர். டப்ளிவ். எம். ஜே. பண்டா<br>4. ஜீ. ஜீ. கருணாரத்ன<br>5. ஜீ. ஜீ. எஸ். மல்காந்தி | 1. ஜீ. ஜீ. பிரேமரத்ன<br>2. ஜீ. ஜீ.என். விஜேசிங்ஹ<br>3. ஜீ.ஜீ.டி. பிரியலால்<br>4. சமிந்த புஷ்பகுமார<br>5. ஆர். டப்ளிவ். எம். ஜே. பண்டா<br>6. ஈ. ஜீ. நிமல் | 107.80 மீ. | 2.50 மீ | 5265 |

03-119

---

## நானாவித அறிவித்தல்கள்

### வவுனியா நகரசபை

சுற்றாடல் பாதுகாப்பு உரிம பரிசோதனைக்கட்டணம் - 2020

தீர்மானம் இல. - VUC/2020/01/22/08

வவுனியா நகரசபை கட்டளைச் சட்டத்தின் 255 இற்கு அமைவாக, 23.01.2020 ஆந் திகதிய தலைவரின் தலைமையிலான சபைக் கூட்டத்தில் சுற்றாடல் உரிமம் வழங்குதல் தொடர்பாக ஆராயப்பட்டதற்கமைவாக, மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள இல : 1534/18 மற்றும் 2008.02.01 ஆந் திகதிய விசேட வர்த்தமானி வெளியீட்டின் அடிப்படையில், மூலதன முதலீட்டை கருத்திற்கொண்டு நிச்சயிக்கப்படும், கீழே காட்டப்பட்டுள்ள சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடிய தொகைக்குட்பட்டு பரிசோதனைக் கட்டணத்தினை 01.01.2020 ஆந் திகதியிலிருந்து அறவிடுவதென பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கட்டணங்கள் யாவும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீங்கலானவை.

| | முழு முதல் (ரூபா) | பரிசோதனைக்கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 01. | 250,000.00 அல்லது குறைந்த தொகை | 3,472.22 +அரச அங்கீகரிக்கப்பட்ட வரிகள் |
| 02. | 250,001.00 - 500,000.00 | 4,305.56 +அரச அங்கீகரிக்கப்பட்ட வரிகள் |
| 03. | 500,001.00 - 1,000,000.00 | 5,740.74 + அரச அங்கீகரிக்கப்பட்ட வரிகள் |
| 04. | 1,000,001.00 - 10,000,000.00 | 11,527.78 + அரச அங்கீகரிக்கப்பட்ட வரிகள் |
| 05. | 10,000,001.00 அல்லது மேற்பட்ட தொகை | 23,009.26+ அரச அங்கீகரிக்கப்பட்ட வரிகள் |

**நகர அபிவிருத்தி அதிகார சபையினது கட்டணம்**

கட்டிட அனுமதி /காணி உபபிரிவிடுகை தொடர்பாக 2009.04.17 ஆந் திகதிய 1597/8 (Special Gazette) வர்த்தமானி பத்திரிகையில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் குறிப்பிடப்பட்ட கட்டணங்களை 01.01.2020 ஆந் திகதியிலிருந்து அறவிடுவதென பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது.

இராசலிங்கம் கௌதமன்,
தலைவர்,
நகரசபை வவுனியா .

03- 62/1

---

**வவுனியா நகரசபை**

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளின் (நியமத் துணை விதிகள்) சட்டம்

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (1) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வவுனியா நகரசபையால் கீழ் கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இராசலிங்கம் கௌதமன்,
தலைவர்,
வவுனியா நகரசபை.

வவுனியா நகரசபை அலுவலகம்
வவுனியா.
2020.02.12

**VUC/2020/01/22/07 இலக்க 23.01.2020 ஆம் திகதிய தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2ஆவது விதியின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2ம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்படி வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016 பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிய 1952/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாணசபையால் 2017.02.21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017 மார்ச் மாதம் 24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 4 (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 1 - 6 வரையான வடக்கு மாகாண நகரசபைகளுக்கான துணைவிதிகள் வர்த்தமானியில்

பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வது என்றும் வவுனியா நகரசபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வவுனியா நகரசபை தீர்மானிக்கின்றது.

03- 62/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது..